செ.வெ.எண்: 54 நாள்:30.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்த 422 தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை சார்பில் அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்த 422 தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.நாகை.V.P.மாலி முன்னிலை வகித்தார்.

உடலுழைப்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, முன்னாள் முதலமைச்சர் டாகடர் கலைஞர் அவர்களால் 17.03.1999 அன்று தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உருவாக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2006 முதல் 2011 வரை 15 தனி நலவாரியங்கள் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பதிவு மற்றும் புதுப்பித்தலின் போது வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 அன்று முதல் முழுமையாக ரத்து செய்யப்பட்டது.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 01.11.2008 முதல் மாவட்டங்கள் தோறும் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியதன் மூலம், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற 50 நாட்களில் 50,000 தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளார்கள். அதனடிப்படையில் இன்று (30.07.2021) 18 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள 422 தொழிலாளர்களுக்கு, ரூ.10,39,500/- தொகைக்கான கல்வி, ஓய்வூதியம், இயற்கை மரணம் / ஈமச்சடங்கு, விபத்து ஊனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவித் தொகைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க மாவட்டச் செயலாளர் திரு.N.கௌதமன், தொழிலாளர் உதவி ஆணையர் திரு.ம.ஸ்ரீதர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**